# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:55** **தேதி:-10.08.2015**

## துணை டவர் நிறுவனத்தை கைவிடு!

அன்பார்ந்த தோழர்களே,

05.08.2015 அன்று நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்திற்கு பின் BSNLஐ காப்பாற்ற மத்திய அமைச்சரவை நல்ல பல முடிவுகளை எடுத்துள்ளதாக பத்திரிக்கை செய்திகள் தெரிவித்திருந்தன. ஆனால் அந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளால் BSNL நிறுவனத்திற்கு லாபம் ஏதும் இல்லாதது மட்டுமல்ல, இந்த நிறுவனத்தை சீரழிக்க எடுக்கப்பட்டுள்ள முடிவுகளே என்பதுதான் சரியாகும்.

சில வருடங்களுக்கு முன் BSNL நிறுவனம் திருப்பிக் கொடுத்த BWA ஸ்பெக்ட்ரத்திற்காக அரசாங்கம் 6,700 கோடி ரூபாய்களை BSNLக்கு தர வேண்டும். அதில் அரசாங்கம் உரிமக் கட்டணமாக BSNL நிறுவனத்திற்கு சொல்லாமலேயே ரூ.2000 கோடிகளை முதலில் எடுத்துக் கொண்டது. மீதம் 4,700 கோடி ரூபாய்களை BSNLக்கு தர வேண்டிய சூழ்நிலையில் இந்த அமைச்சரவைக் கூட்டம் வெறும் 169.16 கோடி ரூபாய்களை மட்டுமே திருப்பித்தர இசைந்துள்ளது. இதனை அரசாங்கம் BSNLன் வளர்ச்சிக்கு செய்துள்ள பேருதவியாக பத்திரிக்கைகள் தெரிவித்துள்ளன.

இந்த அமைச்சரவை கூட்டத்தில் BSNLல் இருந்து டவர்களை பிரித்து ஒரு துணை டவர் நிறுவனத்தை உருவாக்குவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இது அரசாங்கம் நியமித்த டிலாய்ட்டி கமிட்டியின் பரிந்துரை ஆகும். அரசாங்கம் இந்த துணை டவர் நிறுவனம் ஆரம்பிப்பது என்கின்ற முன்மொழிவை கைவிட வேண்டும் என்பது இந்திய நாட்டில் உள்ள 2.25 லட்சம் அதிகாரிகளும், ஊழியர்களும் முழுமையாக பங்கேற்ற 2015, ஏப்ரல் 21 மற்றும் 22 ஆகிய தேதிகளில் நடைபெற்ற இரண்டு நாட்கள் வேலை நிறுத்தத்தின் கோரிக்கைகளில் ஒன்று.

BSNL நிறுவனத்திடம் உள்ள சுமார் 65,000 டவர்களை BSNL நிறுவனத்திடம் இருந்து பிரித்து அதில் பணியாற்றக் கூடிய ஒரு சில அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுடன் டவர் நிறுவனத்திற்கு அனுப்பி விடுவார்கள். இந்த துணை நிறுவனம் செழிப்பாக இருக்கக் கூடும். ஆனால் BSNL நிறுவனத்தின் வருவாய் மிக அதிகமாக குறைவதுடன், அதன் புத்தாக்கம் கடுமையாக பாதிக்கப்படும்.

இந்த துணை நிறுவனத்தின் பெரும்பாலான பங்குகள் BSNLஇடமே இருக்கும் என்கின்ற அறிவிப்பு, இதன் பங்குகள் தனியாருக்கும் வழங்கப்படும் என்பதே பொருள் தருகின்றது. எனவே கொல்லைப்புற வழியாக BSNLன் பங்குகளை விற்கும் ஏற்பாடே இது. மேலும் இந்த நிறுவனம் ஒட்டு மொத்தமாக தனியாருக்கு தாரை வார்க்கும் நோக்கத்துடனேயே உருவாக்கப்படுகிறது.

**எனவே அரசாங்கத்தின் துணை டவர் நிறுவனம் அமைப்பது என்ற முடிவு, தனியார்களுக்கு BSNLஐ தாரை வார்க்கும் முயற்சி என்பதாலும், இதனால் BSNL நிறுவனம் மேலும் நலிவடையும் என்பதாலும், இதனை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என சக்தியாக முழங்க வேண்டிய நேரம் இது. எனவே 12.08.2015 அன்று அனைத்து கிளைகளிலும் ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டும் என்று அகில இந்திய FORUM விடுத்துள்ள அறைகூவலை அனைத்து சங்க உறுப்பினர்களையும் இணைத்து வெற்றிகரமாக்கிட வேண்டும் என மாவட்ட/கிளை செயலாளர்களை தமிழ் மாநில சங்கம் கேட்டுக் கொள்கிறது.**

வாழ்த்துக்களுடன்,

**தோழமையுள்ள,**

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**